# உங்கள் அன்புக்குரியவர் படுத்த-படுக்கையாக இருக்கிறாரா?



உங்களுக்கும் உங்கள்
அன்புக்குரியவருக்கும்
ஆதரவளிக்கக்கூடிய சேவைகளைப் பற்றி
தெரிந்து கொள்ளவும்.

agency for
integrated care

உங்கள் அன்புக்குரியவருக்கு மிகவும் பொருத்தமான திட்டங்கள் மற்றும் சேவைகளிலிருந்து தேர்ந்தெடுக்கவும். மேலும் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

# வீட்டிலேயே பராமரிப்பு

ஒரு பழக்கமான சூழலில் இருப்பது உங்கள் அன்புக்குரியவரின் உடலையும் மனதையும் குணப்படுத்த சிறந்த ஆதரவை அளிக்கிறது. அவர்கள் வீட்டிலேயே குடும்பத்துடன் தங்கலாம், வீட்டு பராமரிப்பு சேவைகள், அதாவது தாதிமை ஆதரவு மற்றும் வீட்டைச் சுற்றி கூடுதல் உதவி போன்றவை அவர்களின் வீட்டு வாசலில் கிடைக்கும்

## வீட்டு மருத்துவ சேவைகள்

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக கொழுப்பு போன்ற நாள்பட்ட நிலைமைகளுக்கு ஒரு பராமரிப்பு நிபுணர் சிகிச்சை அளிக்கிறார்.

## வீட்டு தாதிமை சேவைகள்

காயங்களுக்கு மருந்து போடுதல், ஊசி போடுதல் மற்றும் உணவு குழாய்களை மாற்றுதல் போன்றவற்றில் ஒரு தாதியர் உதவுகிறார்.

## வீட்டு சிகிச்சை

உங்கள் அன்புக்குரியவர் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறனை மீண்டும் பெற அல்லது பராமரிக்க ஒரு சிகிச்சையாளர் உதவுகிறார்.

## உணவு விநியோகம்

உங்கள் அன்புக்குரியவர் சொந்தமாக உணவை வாங்கவோ அல்லது சமைக்கவோ முடியாவிட்டால், அவர்களுக்கு உணவு வாங்கிக் கொடுக்க யாரும் இல்லை என்றால்,அவர்களுக்கு உணவு கொண்டு சேர்க்கப்படும்.

### அந்திமகால இல்லப் பராமரிப்பு

உங்கள் அன்புக்குரியவருக்கு வாரங்களில் அல்லது மாதங்களில் எதிர்பார்க்கப்படும் முற்றிய அல்லது முற்றக்கூடிய சுகாதார நிலைமைகள் இருந்தால், வீட்டிலேயே அவர்களுக்குப் பராமரிப்பு வழங்கவும்.

### தனிப்பட்ட முறையில் வீட்டு பராமரிப்பு

பயிற்சி பெற்ற பராமரிப்பு ஊழியர்கள் உங்கள் பலவீனமான அன்புக்குரியவருக்கு அவர்களின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள் மற்றும் மளிகைப் பொருட்கள் வாங்குதல் மற்றும் சிறிய வீட்டு பராமரிப்பு போன்ற பிற பணிகளுக்கு உதவுவார்கள்.

# பராமரிப்பிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வது

உங்கள் அன்புக்குரியவரைப் பராமரிப்பது போலவே உங்களை கவனித்துக் கொள்வதும் முக்கியம்.

நீங்கள் விரும்பும் விஷயங்களைச் செய்ய இடைவேளை எடுக்கலாம் அல்லது உங்கள் சகாக்களுடன் பராமரிப்பு உதவிக்குறிப்புகளை இணைத்து பகிர்ந்து கொள்ள பராமரிப்பாளர் ஆதரவு குழுக்களில் சேரலாம். மேலும் தகவலுக்கு, for.sg/aic-csn ஐப் பார்வையிடவும்.

### தாதிமை இல்ல ஓய்வு பராமரிப்பு

உங்களுக்கு குறைந்தபட்சம் ஏழு நாட்கள் இடைவெளி தேவைப்பட்டால், அதிக பராமரிப்புத் தேவைகளைக் கொண்ட அன்புக்குரியவர்களுக்கு சுகாதார சேவைகளுடன் கூடிய தங்கும் விருப்பம்.

# பராமரிப்பு செலவு

நிதி உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு, உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவருக்கும் உதவக்கூடிய பல்வேறு திட்டங்கள் உள்ளன.

## பராமரிப்பாளர் பயிற்சி மானியம் (CTG)

பராமரிப்பாளர் பயிற்சி மானியம் (CTG) என்பது $200 வருடாந்திர மானியமாகும்* இது பராமரிப்பாளர்கள் குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்(கள்) (MDWs) உட்பட , பராமரிப்பு பெறுபவரை சிறப்பாகப் பராமரிக்க அங்கீகரிக்கப்பட்ட வகுப்புகளில் கலந்து கொள்ள அனுமதிக்கிறது.

CTG-யின் கீழ் கிடைக்கும் வகுப்புகளின் பட்டியலுக்கு QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

*ஏப்ரல் 1, 2024 முதல், தகுதியுள்ள பயனாளிகள் $400 மானியத்துடன் தொடங்குவார்கள். ஒவ்வொரு ஆண்டும், பராமரிப்பு பெறுபவர்களின் பராமரிப்பாளர் பயிற்சி மானியத்திற்கு $200 நிரப்பப்படும், மேலும் பயன்படுத்தப்படாத பணத்தை முன்னோக்கி எடுத்துச் செல்லலாம், ஒவ்வொரு பராமரிப்பு பெறுநருக்கும் பராமரிப்பாளர் பயிற்சி மானியத் தொகை உச்சவரம்பு  $400 ஆக இருக்கும்.

## உடற்குறையுள்ளோருக்கான குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண் வரிச்சலுகை (MDW Levy Concession)

பலவீனமான மூத்தவர் அல்லது உடற்குறை உள்ள அன்புக்குரியவரைப் பராமரிக்க உதவுவதற்காக ஒரு MDW-ஐ நீங்கள் பணியமர்த்தும்போது, மாதத்திற்கு $60 ($300க்கு பதிலாக) குறைந்த தீர்வையைச் செலுத்துங்கள்.

## வீட்டு பராமரிப்பு மானியம் (HCG)

மிதமான முதல் கடுமையான உடற்குறையுள்ள உங்கள் அன்புக்குரியவரைப் பராமரிக்கும் போது மாதத்திற்கு $250 அல்லது $400 ^ பெறுங்கள்.

^நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சொத்துக்களை வைத்திருந்தால், மாதத்திற்க குறைந்த அடுக்குக்கான $250 பெறுவீர்கள்.

### மூத்த குடிமக்களின் நடமாட்டம் மற்றும் செயல்படுத்தல் நிதி (SMF)

உங்கள் அன்புக்குரியவர் தனது அன்றாட நடவடிக்கைகளுக்கு (எ.கா. குளித்தல், நடைபயிற்சி) மற்றும் வீட்டு சுகாதாரப் பொருட்களுக்கு உதவும் சாதனங்களுக்கான நிதியுதவிகளுடன்  நடமாட்டத்துடன் இருக்கவும் சுதந்திரமாக வாழவும் முடியும்.

### முன்னோடி தலைமுறை உடற்குறையுள்ளோர் உதவித் திட்டம் (PioneerDAS)

ஒரு முன்னோடியாக, உங்கள் அன்புக்குரியவருக்கு மிதமான முதல் கடுமையான உடற்குறை இருந்தால், அவர்களின் பராமரிப்புச் செலவை ஆதரிக்க மாதத்திற்கு $100 பெறலாம்.

### முதியோருக்கான உடற்குறையுள்ளோர் இடைக்கால உதவித் திட்டம் (IDAPE)

உங்கள் அன்புக்குரியவர் எல்டர்ஷீல்டு / கேர்ஷீல்டு லைஃப்தொடங்கப்பட்டபோது அதற்குத் தகுதி பெறவில்லை என்றால், அவர்கள் மாதந்தோறும் $150 முதல் $250 வரை ரொக்கப் பணத்தைப் பெறலாம்

# தாதிமை இல்லப் பராமரிப்பு

ஒரு தாதிமை இல்லம் என்பது ஆடை அணிதல், குளித்தல் அல்லது மருந்து எடுத்துக்கொள்வது போன்ற அன்றாட நடவடிக்கைகளில் சில உதவி தேவைப்படும் மூத்தவர்களுக்கானது.

உங்கள் அன்புக்குரியவருக்கு அதிக அளவிலான மருத்துவ உதவி தேவைப்பட்டால், அல்லது தற்போதைய வீட்டு பராமரிப்பு சேவைகளால் வழங்க முடியாத அளவுக்கு விரிவான பராமரிப்பு தேவைகள் இருந்தால், ஒரு மருத்துவ சமூக சேவகர் அவர்களை ஒரு தாதிமை இல்லத்துக்குப்

# பராமரிப்பின் மையம்

கிளிக் செய்யவும்
**www.aic.sg**

அழைக்கவும்
**1800 650 6060**

செல்லவும்
**AIC Link**

ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு (AIC), மக்கள் நலமாக வாழ்வதற்கும், அழகாக மூப்படைவதற்க்கும் ஒரு துடிப்பான பராமரிப்பு சமூகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பராமரிப்பு விளைவுகளை அடைவதற்காக, பராமரிப்பை ஒருங்கிணைப்பதில் AIC முயற்சிகளை ஒருங்கிணைத்து ஆதரிக்கிறது.

பராமரிப்பாளர்கள் மற்றும் மூத்த குடிமக்களை சுறுசுறுப்பாக இருப்பது மற்றும் நன்கு மூப்படைவது பற்றிய தகவல்களுடன் நாங்கள் அணுகுகிறோம், மேலும் மக்களை அவர்களுக்குத் தேவையான சேவைகளுடன் இணைக்கிறோம்.

பராமரிப்பின் தரத்தை உயர்த்துவதற்கான அவர்களின் முயற்சிகளில் பங்குதாரர்களை நாங்கள் ஆதரிக்கிறோம், மேலும் மூப்படையும் மக்களுக்கு சேவைகளை வழங்க சுகாதாரம் மற்றும் சமூக பராமரிப்பு கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுகிறோம். சமூகத்தில் எங்கள் பணி, பராமரிப்பு சேவைகள் மற்றும் தகவல்களை தேவைப்படுபவர்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருகிறது.

விவரங்கள் Mar 2025 நிலவரப்படி சரியானவை